# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2006
# அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## Tamil Competition - Australian Society of Graduate Tamils

### வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டிக்களுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1. இப்போட்டிகள் பின்வரும் வயதுப்பிரிவுகளில் நடாத்தப்படும்.

| | | | |
|---|---|---|---|
| ஆரம்ப பிரிவு | - 5-6 வயது | கீழ்ப் பிரிவு | - 6-8 வயது |
| மத்திய பிரிவு | - 8-10 வயது | மேற்பிரிவு | - 10-13 வயது |

2. இப்போட்டி, நாளாந்தம் வீட்டில் குடும்ப அங்கத்தினருக்கிடையேயும், தமிழ் கல்வி நிலையங்கள் மற்றும் தமிழ் சமூகத்தினரின் திருமணங்கள், தமிழ் கலாசார நிகழ்ச்சிகள் ஒன்றுகூடல் போன்ற பொது வைபவங்களில் இடம்பெறக்கூடிய உரையாடல்களைப் போன்றதாக இருக்கும். உலகத் தமிழ் சமுதாயம் சம்பந்தமானதாகவும் அவரவர் வயதுப்பிரிவிற்கேற்ப வேறுபட்ட தரங்களில் அமைந்திருக்கும். மேற்பிரிவு போட்டியாளர்கள் அவர்களின் பெற்றோரின் தாய்நாடு பற்றியும் அங்குள்ள சமகால நிலமை பற்றியும் அறிந்திருத்தல் விரும்பத்தக்கது.

3. இவ்வுரையாடல் சுமார் 7-10 நிமிடங்களுக்கு இடம்பெறும். ஒவ்வொரு போட்டியாளரிடமும் அறிமுகக் கேள்விகளுடன், குறைந்தது 5 கேள்விகள் கேட்கப்படும். இதில் உரையாடலுக்குத் தான் முக்கியமே தவிர போட்டியாளர்களின் பதில் தரவுகளின் நியாயப்பாடு, சரி/பிழைக்குப் புள்ளிகள் இல்லை.

4. போட்டியாளர்கள் அனைவரும் போட்டி நடைபெறும் மண்டபம் அல்லாத ஒரு அறையில் இருக்கவேண்டும். ஒவ்வொருவராக அழைக்கப்படும் போட்டியாளர் மட்டும் போட்டி நடைபெறும் மண்டபத்திற்கு வர அனுமதிக்கப்படுவார். இப்போட்டிகளின் போது பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இந்தவேளையில் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் முன்னுரிமை வழங்கப்படும். போட்டியாளரின் பெற்றோர் முன்கூட்டியே மண்டபத்தில் வந்து இருக்கலாம் அல்லது தமது பிள்ளைகளை அழைக்கும் போது அவர்களுடன் மண்டபத்துள் வரலாம். ஏற்கனவே போட்டிகளை பார்த்த பெற்றோருக்கும், குடும்பத்தினருக்கும், போட்டி நடைபெறும் மண்டபத்தில் இருந்து வெளியேறிவிட்டுப் போட்டியில் பங்குபற்ற இருக்கின்ற தமது பிள்ளைகளை சந்திக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

5. போட்டியின் போது **உச்சரிப்பு (20 %)**, **சொற்பிரயோகம் (20 %)**, **உரையாடும் திறன் (50 %)**, **உரையாடலில் பங்குபற்றும் நிலை (10 %)** ஆகியன கவனிக்கப்படும்.

6. **உச்சரிப்புத் திறன் (20 %)**
   - பிராந்தியப் பேச்சு வழக்கு, அதாவது தமிழ்நாடு, தமிழீழம், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் உச்சரிப்புகளும், அவர்களது பேச்சு வழக்குகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.
   - முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள, / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகள்
   - வல்லின, மெல்லின வேறுபாடு அறிந்து தெளிவாக உரையாடுதல்
   - தூய தமிழ் உச்சரிப்பு (As opposed to English accent)
   - சொற்களை விழுங்காது உரையாடுதல்

7. **சொற்பிரயோகம் (20 %)**
   - தெளிவான, தூய தமிழ் மொழி நடையாக உரையாடல் இருத்தல் வேண்டும்.
   - ஒரு தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கில வார்த்தை பயன்படுத்தினால் அதற்கு புள்ளிகள் குறைக்கப்படும். (உதாரணமாக: `பந்து' என்பதற்குப் பதிலாக `Ball' என்று பாவிப்பது தவிர்க்கப்பட வேண்டும்).
   - ஒரு ஆங்கிலச் சொல்லுக்கு உரிய தமிழ் பதம் இல்லாதவிடத்தில் அதே சொல்லை அதே உச்சரிப்புடன் பயன்படுத்தலாம். உ+ம்: Australia, calculator, Video, DVD, CD எனும் பொதுப் பாவனையிலுள்ள சொற்கள் ஏற்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு:** Email: tamilcomp@yahoo.com Web: www.unifundproject.org
Tele: 0433 088 725 or 02-9758 7970

- கேள்விகள் விளங்காவிட்டால், போட்டியாளர் கேள்வியை மீண்டும் ஒரு முறை வினாவும்படி கேட்கலாம். அப்படியும் கேள்விகள் விளங்காத சந்தர்ப்பத்தில், வேறு தமிழ்ச் சொல்லுடன் சற்று இலகு தமிழில் கேட்கப்படலாம்.

8. **உரையாடும் திறன் (50 %)**
   - சரளமாக உரையாடும் தன்மை.
   - பல விதமான வினாக்களுக்கும் சரியான அளவான பதில் அளிக்கும் தன்மை.
     - விரிவான பதில் எதிர்பார்க்கப்படும் (Open ended question) வினா, உ+ம்:
       உங்களுடைய மறக்கமுடியாத ஒரு சம்பவம் பற்றி கூறுங்கள்?
     - சுருக்கமான பதில் எதிர்பார்க்கப்படும் (Close ended question) வினா, உ+ம்:
       உங்களுக்குப் பிடித்த ஒரு பறவையின் பெயரைச் சொல்லுங்கள்?
   - அநாவசியமான, அளவிற்கதிகமான, அதிகப்பிரசங்கித்தனமான, உரையாடலுக்கும், வெட்டொன்றாக அமையும் ஒரு வரிப் பதில்களுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.
   - சைகைகளினால் (தலையாட்டல், கை அசைத்தல் மூலம்) வழங்கப்படும் பதில்களுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.

9. **உரையாடலில் பங்குபற்றும் நிலை (10 %)**
   - மண்டபத்துள் நுழையும் போதும், வெளியேறும் போதும், ஆசனத்தில் அமர்ந்திருக்கும் போதும் சரியான நிலையில் தம்மை வைத்திருத்தல். (நெளிதல், வளைதல்களைத் தவிர்த்தல்)
   - அடக்கமாகவும், சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து உரையாடல்.
   - உரையாடலை ரசித்துப் பங்குகொள்ளும் தன்மை. அத்துடன் உணர்ச்சிகளுக்கு சரியான முகபாவனைகள் காட்டப்பட வேண்டும்.
   - போட்டியாளர்கள் நடுவர்களை பார்த்து (good eye contact), தன்னம்பிக்கையுடன், உரையாடுதல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களில் ஒருவரை மட்டும் பார்ப்பதையோ, நிலத்தை, கூரையை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல் வேண்டும். உரையாடலின் போதும் கேள்விகள் கேட்கப்படும் போதும் அலட்சியமாக இருப்பதைத் தவிர்த்தல் வேண்டும்)
   - கேள்வி கேட்கப்படும் போது குறுக்கீடு செய்யக்கூடாது. குறுக்கீடு செய்வதனால் கேள்வியை அவதானிக்காது, திரும்பவும் கேள்வியைக் கேட்டால் அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

10) **போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:**
   - நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களையும், நேர அட்டவணையையும் ஏற்கனவே உங்களுக்கு அனுப்பி வைத்துள்ளோம். உங்கள் விண்ணப்பம் முழுமை பெறாவிட்டால் எம்முடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்தை பூர்த்தி செய்யவேண்டும். 10/07/06ற்கு முன்னர் எம்முடன் தொடர்புகொள்ளத் தவறின், நீங்கள் போட்டியில் தோற்றும் தகுதியை இழக்கின்றீர்கள்.
   - எமது கடிதம் கிடைக்காவிட்டால் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
   - போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
   - விண்ணப்பப் கட்டணத்தை($5.00) முன்கூட்டியே செலுத்தி அசௌகரிகத்தை குறைக்கவும்.
   - உங்கள் மின்னஞ்சல் விபரத்தை ஏற்கனவே தராவிடின், தயவு செய்து அனுப்பி விடவும்.
   - மேலதிக விபரங்களுக்கு போட்டிகளுக்குரிய முழுமையாக எமது விதிமுறைகளை வாசிக்கவும் அல்லது எம்முடன் கீழுள்ள வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.
   - போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார்.
   - எமது பரீட்சை சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு**
**அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்**

**மேலதிக விபரங்களுக்கு:** Email: tamilcomp@yahoo.com Web: www.unifundproject.org
Tele: 0433 088 725 or 02-9758 7970